# ❁ஸ்ரீநிவாச திருக்கல்யாணம் ❁




ஸ்ரீநிவாசன் வேட்டையாடிக் கொண்டிருக்கையில் ஒரு மதயானை மட்டும் உலகமே அஞ்சி நடுங்கும் வண்ணம் பிளிறிக்கொண்டு ஓடத் தொடங்கியது. திருமாலும் அதனைத் துரத்திக்கொண்டு குதிரையில் விரைந்தார்.

எங்கெல்லாமோ சுற்றி அலைந்து திரிந்து ஓடிய அந்த யானை இறுதியாக பத்மாவதியின் அந்தப்புரத்திற்குள் நுழைந்தது.

அம்மதயானை பயங்கரமாக பிளிறிய வண்ணம் துதிக்கையை மேலே உயர்த்தி, ஸ்ரீநிவாசனை வணங்கிவிட்டு எங்கோ ஒரு நொடிப்பொழுதினுள் ஓடி மறைந்துவிட்டது. அந்த மதயானை வேறு யாரும் இல்லை, நாரதமகரிஷி தான். ஸ்ரீநிவாசனையும் - பத்மாவதியையும் சந்திக்க வைக்க மதயானை போல் வந்து நடித்தார்.

ஸ்ரீநிவாசனுக்கு யானையின் செயல் விந்தையாகத் தெரிந்தது. ஸ்ரீநிவாசன் குதிரையை விட்டுக் கீழே இறங்கினார். மலர் வனத்தினுள் அழகு நடை போட்டார்.

யானையின் பிளிறலைக் கேட்டு பத்மாவதியும், தோழியரும் பயந்து அந்தப்புரத்தில் இருந்து வெளியே ஓடி வந்தனர். நாராயணன் அந்தப்புரத்துள் மன்மதனைப் போன்ற

பேரெழிலுடன் வந்து கொண்டிருந்தார்.

நாராயணன் பத்மாவதியைப் பார்க்க, பத்மாவதி யானையின் சத்தத்தைக் கேட்டு ஓடி வந்த பதற்றத்தில் ஸ்ரீநிவாசனைப் பார்க்க இருவரும் ஒருவரையொருவர் ஒரு கணம் பார்த்தவாறு அசைவற்று நின்றனர்.

திருமால் பத்மாவதியின் திருஉருவத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். அப்படியே மெய்மறந்து நின்றார்.

இன்பநிலையில் மது உண்ட வண்டு போல் மயங்கி நின்ற பரந்தாமன், முகம் மலர, தோழியரை அணுகி, "நீங்களெல்லாம் யார்? உங்கள் தலைவியின் பெயரென்ன? ஊரென்ன?" என்றெல்லாம் ஆவலோடு கேட்டார்.

மாயவன் பொழிந்தது கேட்டு சினங்கொண்ட தோழிகள், "நன்றாக இருக்கிறது உங்கள் கேள்வி! உத்தரவின்றி அரசகுமாரியின் அந்தப்புரத்திற்குள் நுழைந்தது மட்டுமின்றி கேள்வி வேறா கேட்கிறீர்? மரியாதையாகப் போய்விடு. இது எங்கள் தலைவியின் ஆணை! தலைவியார் சொன்னால் சொன்னது தான். ஆணையிட்டால் ஆணையிட்டது தான்" என்று படபடப்புடன் வாய்க்கு வந்தபடி பேசினர் தோழிகள்.

ஸ்ரீநிவாசன் புன்னகை அரும்புகளைச் செவிகளில் உதிர்த்த வண்ணம், "ராஜகுமாரி கேட்கச் சொன்ன கேள்விகளுக்கு ராஜகுமாரியிடமே உகந்த பதிலைக் கூறிவிடுகிறேன். அதற்காக நீங்கள் சிரமப்பட வேண்டாம்" என்று உரைத்தார்.

பத்மாவதி அருகே சென்றார்.

"ராஜகுமாரி! என்னைப் பற்றிய விருத்தாந்தங்களை நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். அதற்கு முன் நீங்கள் எந்த நாட்டு இளவரசி? உங்கள் பெற்றோர்கள் யார்? என்பதை உரைத்தல் வேண்டும்" என்றார்.

ஸ்ரீநிவாசன் இவ்வாறு கேட்டபோது பத்மாவதிக்கு ஒருபுறம் கோபம் வந்த போதும், தான் இன்னார் என்பதை அறிந்தால் இந்த வேடன் பயந்து ஓடி விடுவான் என்ற தைரியம் மறுபுறம் ஏற்பட்டது.

"வேடனே! திக்கெட்டும் புகழ் மணக்க நல்லாட்சி நடத்தும் ஆகாச மன்னரின் குமாரி நான்! என் பெயர் பத்மாவதி! இது எங்கள் அந்தப்புரம். இங்கு ஆண்கள் வரக்கூடாது. அதனால் நீ உடனே இங்கிருந்து வெளியேறிவிடு. இல்லையேல் வீண் விபரீதம் நடக்கும்" என்று சற்று கோபத்துடன் சொன்னாள் பத்மாவதி.

"பத்மாவதி நான் யார் தெரியுமா? க்ஷத்திரிய குலத்திலே பிறந்தவன். சந்திர வம்சத்தின் சந்ததி! வீரம் எனக்கு விளையாட்டு! வேட்டையாடுதல் எனக்கு பொழுதுபோக்கு. கணையால் காட்டு விலங்குகளைக் கொல்வேன். கண் அசைவால் கன்னியரைக் கவலைக்குள்ளாக்குவேன்.

சேஷாசலத்தில் வசிக்கும் என்னைப் பற்றித் தெரியாதவர்கள் அந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் எவருமே இருக்க முடியாது. நான் தவசியருக்குத் தோழன். வேத விற்பன்னர்களுக்கு ஆசான். அறம் வழுவாத வேந்தர்க்கு நல்ல அமைச்சன்.

உங்களைப் போன்ற அழகுக் கோபியருக்கு அருமையான சேவகன். என் பெயர் கண்ணன்! தாயின் பெயர் தேவகி. தந்தையின் பெயர் வசுதேவர். தங்கை சுபத்திரை. அண்ணன் பலராமன். பஞ்சபாண்டவர்களுக்கு பரோபகாரி" என்றார் ஸ்ரீநிவாசன்.

இத்தனையும் கேட்ட பத்மாவதியும் - தோழியரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

"கலியுகக் கண்ணனே! எங்கள் இராஜகுமாரியின் அழகைப் பார்த்து மயங்கிப்போன உமக்குப் பித்தம் தலைக்கேறி பிதற்றத் தொடங்கிவிட்டீர். ஐயோ பாவம்" என்றெல்லாம் கேலி பேசினர் தோழிகள்.

பத்மாவதி கோபங்கொண்டு, "வேட்டைக்கு வந்தவனோடு எதற்காக வீண் வார்த்தை ஆடுகிறீர்" என்று தோழியரைக் கடிந்து கொண்டாள் பத்மாவதி.

பத்மாவதி பேசப் பேச நாராயணனுக்கு அவள் மேல் மோகம் அதிகரித்தது. விண்மீண்கள் நடுவே ஒளிவிடும் வான்மதிபோலக் காணப்பட்ட பத்மாவதியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

ஸ்ரீநிவாசன் தன் திருவாய் மலர்ந்து, "பத்மாவதி! மதயானையைத் துரத்தி வந்தேன். இந்த மடமானைச் சந்திப்பேன் என்று எண்ணவில்லை. சந்தித்ததும் ஒரு விதத்தில் நல்லதாகிவிட்டது. நமக்குள் திருமணம் என்ற பிணைப்பு ஏற்படுவதற்குக் காரணமாகிவிட்டதல்லவா? நாம் இருவரும் அந்த மதயானைக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். என்ன இளவரசி? நான் மொழிவது உண்மைதானே!"

"போதும் உனது வர்ணனையும், வேடிக்கையும் அந்தப்புரத்துள் நுழைந்ததும் அல்லாமல் வரம்பு மீறிப் பேசுகிறாய்! உயிர் மீது ஆசை இருந்தால் ஓடிவிடும்!" என்று கோபித்தாள் பத்மாவதி.

அதற்குத் தோழியர்கள், "எங்கள் தலைவியைத் திருமணம் புரிந்து கொள்ளப் போவது உம்மைப் போன்ற வேட்டைக்காரன் அல்ல! திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் ஸ்ரீமந்நாராயணனே நேரில் வந்து மாலை இட்டு மனைவியாக ஏற்றுக் கொள்ளப் போகிறார்.

அதுமட்டுமா! ஆயிரக்கணக்கான அதிவீர பராக்கிரம சாலிகளான பல தேசத்து வேந்தர்கள், கப்பங் கட்டக் காத்துக்கிடப்பது போல், ராஜகுமாரியை மணக்க அல்லும் பகலும் காத்துக் கிடக்கிறார்கள். இவற்றை எல்லாம் உணராமல் உளறுகிறாய்! உயிர்மீது ஆசை இருந்தால் ஒழுங்காக உனது சேஷாசலத்திற்குப் போய்விடு" என்று மேலும் வெறுப்போடு பேசினர்.

அவர்களது கேலி மொழிகளை நாராயணன் சற்று கூடச் செவிகளில் போட்டுக் கொள்ளவில்லை. பத்மாவதியைப் பார்த்துத் தமது விரகதாபத்தை மேலும் வெளிப்படுத்தலானார்.

"பத்மாவதி! நாமிருவரும் சந்திர குலத்தைச் சார்ந்தவர்கள். வயது, குணம், சௌந்தரியம் அனைத்திலும் இணையானவர்கள். நாம் இருவரும் மணம் புரிந்து வாழ்வதுதான் பொருந்தும். என்னையும், என் வேண்டுகோளையும் நிராகரிக்காதே!

என்னை எந்த அளவிற்கு நிந்திக்கிறாயோ அதைவிடப் பன்மடங்கு என் நினைவால் உள்ளம் உருகி, உடல் வாடும் நிலையை அடைவாய். அதனால் என் சொல்லைத் தட்டாதே! என்னை மணக்கிறேன் என்று மனமாரச் சொல்!"

பத்மாவதிக்குக் கோபம் எல்லை மீறியது. தோழியர்களைப் பார்த்து, "இவனோடு நமக்கு என்ன வாதம்? காவலர்களை அழைத்துப் பலாத்காரமாக வெளியே அனுப்புங்கள்" என்றாள். கல்லால் அடிப்பது போல், சொல்லால் அடித்தாள் பத்மாவதி. அச்சொற்கள் நாராயணனின் நெஞ்சைத் தாக்கின.

நாராயணன் நெஞ்சம் நைந்து உருக, "பெண்ணே! உன் அகக்கண்கள் குருடாகி விட்டதால் தான் உன்னால் என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

பத்மாவதி திடுக்கிட்டாள்! அவளது சிந்தை சுழன்றது. அவளது மனத்திலே பலவித சலனங்கள். உள்ளத்தில் ஏதோ, ஒரு இனம் தெரியாத மயக்கம். அதனால் பேச முடியாமல் ஒரு தயக்கம்!

அஞ்சனை வண்ணன் அவள் அருகே சென்று, "வேதவதி! நான் வருகிறேன்" என்று சொல்லியவாறு ஓரிரு வினாடிகள் பத்மாவதியையே பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் சட்டென்று வெண்புரவியில் அமர்ந்து காற்றினும் கடுக விரைந்தார்.

நாராயணனின் அருளால் பத்மாவதியின் அகக்கண்கள் மலர்ந்தன. "வேதவதி" என்ற சொல் அவள் இதயத்தை இனம் புரியாத குழப்பத்தில் ஆழ்த்தியது.

பத்மாவதிக்குப் பூர்வ ஜென்ம விருத்தாந்தங்கள் தோன்றி மறைந்தன. அவள் உதடுகள், "சுவாமி" என்றன. அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. நா தளர்ந்தன. அப்படியே பூமியில் விழப்போனாள். தோழியர்கள் தாங்கிப் பிடித்தன. பத்மாவதி பித்துப் பிடித்தவள் போல் நிலை தடுமாறினாள். அவளது அகக்கண்ணிலும் புறக்கண்ணிலும், நாராயணனின் திருத்தோற்றம் காட்சி அளித்தது.

பால் கசந்தது; படுக்கை நொந்தது. உறக்கம் பிடிக்கவில்லை. இரவும், பகலும் நாராயணனின் நினைவாகவே எண்ணாத துயரமெல்லாம் கொண்டிருந்தாள். பத்மாவதியைக் காதல் நோய் பற்றிக் கொண்டது. அவள் உடலில் பசலைப் பூத்தது.

தரணிதேவிக்கும் ஆகாசராஜனுக்கும் ஒன்றும் விளங்கவில்லை. அரண்மனை வைத்தியரை அழைத்து சிகிச்சை செய்தனர். மாந்தரீகர்களை அழைத்து வந்து பார்த்தனர். ஒரு பலனும் கிட்டவில்லை. ஆலய வழிபாடு செய்தனர். பலன் ஏதும் இல்லை. நாளுக்கு நாள் பத்மாவதியின் உடல் கவலைக்கிடமாகிக் கொண்டிருந்தது.

மன்னன் மருண்டான். இறுதியில், காவலரை அழைத்து சுக முனிவரை அழைத்துவரச் செய்தான்.

சுகமுனிவரும், "அரசே! பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அகஸ்தியர் ஆசிரமத்திற்கு அருகே கோவில் கொண்டுள்ள பரமேஷ்வரனுக்கு அபிஷேக ஆராதனைகள் புரிந்து, அந்த நீரினை பத்மாவதிக்கு கொடுங்கள். அனைத்தும்

சரியாகிவிடும்" என்று உபாயத்தைக் கூறிவிட்டுச் சென்றார்.

ஆகாசராஜனும் அதற்கான ஏற்பாட்டைத் தொடங்கினான். மன்னனின் ஆணைப்படி பதினோரு வேதவிற்பன்னர்கள் சிவ வழிபாட்டிற்குப் புறப்பட்டனர்.

சிவபெருமானின் அருளால் பத்மாவதி சற்று நினைவு திரும்பினாள். ஆனால், அவளால் யாரிடமும் எதுவும் பேசமுடியவில்லை. சதா சர்வ காலமும் பித்துப் பிடித்தவள் போல் இருந்தாள்.

ஸ்ரீமந்நாராயணன் நடத்தும் திருவிளையாடலைச் சிவபெருமானும் அறியாதவர் அல்லவே?! நாராயணனே முன் நின்று அனைத்தையும் முடிக்கட்டும் என்று ஆகாசராஜனின் கவலையைப் போக்கவில்லை. பத்மாவதியின் நிலையையும் மாற்றவில்லை.

பத்மாவதியின் நினைவாகவே சேஷாசலத்திற்கு எழுந்தருளிய ஸ்ரீநிவாசன் மோகத்தால் சோகத்தில் மூழ்கியிருந்தார்.

மலர் பரப்பிய மணி மஞ்சத்தில், பொற் திருமேனி துயரத்தால் மனம் வாடி பள்ளி கொண்டிருந்தார் ஸ்ரீநிவாசன். மாதவனின் மலர் விழிகள் மூடியிருந்தன. தம்மையே மறந்த வண்ணம் திருக்கண் மலருவதைப் போல் சயனித்திருந்த சமயத்தில், வகுளமாலிகை, கனிகளுடனும், தேன் சிந்தும் நறுமலர்களுடனும் உள்ளே நுழைந்தாள்.

திருமால் தூங்குகின்றாரா? அன்றி அயர்வு காரணமாகச் சயனித்திருக்கின்றாரா? என்பதைத் தனக்குள் எண்ணிப் பார்த்த வகுளமாலிகை, "கண்ணா!" என்று தேனொழுக அழைத்தாள்.

பகவான் திருக்கண் மலர்ந்து நோக்கினார். அவரது மலர்ந்த விழிகளில், வேதனையைக் கண்ட, வகுளமாலிகை உள்ளம் பதறிப் போனாள். தீஞ்சுவைக் கனிகளையும், நறுமலர்களையும் வைத்துவிட்டு திருமாலின் திருநெற்றியை மெதுவாகத் தொட்டுப் பார்த்தாள்.

"மாதவா! திருமேனி சுடுகிறதே! வேட்டைக்குப் போன இடத்தில் என்ன நடந்தது? உன் செந்தாமரை முகம் வாடியிருப்பதன் காரணம் என்ன?"

அடியார்களின் அல்லலை அகற்றும் அனந்தன் தம் மனத்தில் துன்பத்தைச் சுமந்த வண்ணம் பதில் ஏதும் பேசாமல் மௌனமாகக் காட்சியளிப்பது கண்டு வகுளமாலிகை, புழுவினைப் போல் துடித்தாள்.

"கேசவா! ஏன் இப்படி மௌனம் சாதிக்கின்றாய்? வெண்ணெய் உண்ட உன் செவ்வாய், மண்ணை உண்ட போது காட்டிய மௌனத்தை ஏன் காட்டுகிறது? வனவிலங்குகளால் ஆபத்து ஏதாவது நேர்ந்ததா? பொன் திருமேனி புரவியில் எழுந்தருளியதால் வெதும்பி விட்டதா? மாலை மயங்கும் வரை வயிற்றுக்கு அமுதேதும் கொள்ளவில்லையா?" என்றெல்லாம் தொடர்ந்து கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள்.

திருமாலுக்குப் பொற் தட்டில் தீஞ்சுவைக் கனிகளையும், நறுந்தேனையும், வெண்ணெயும் பாலும் சமர்ப்பித்தாள்.

திருமால் தீஞ்சுவைக் கனிகளைத் தேனிலும், பாலிலும் சுவைத்துக் கொண்டிருந்தாரே தவிர, அவரால் வகுளமாலிகையின் கேள்விகளுக்குப் பதில் உரைக்க வேண்டும் என்ற எண்ணமே எழவில்லை.

ஸ்ரீநிவாசன் திருவாய் மலராமல் இருக்கும் நிலை கண்டு உள்ளமும், உடலும் பதறிப்போன வகுளமாலிகையின் கண்களில் கண்ணீர் பெருகியது. அதைப் பார்த்ததும் நாராயணனின் நெஞ்சு நெகிழ்ந்தது. "அம்மா!" என்றழைத்தார்.

"அம்மா" என்ற அமுதமொழியிலே, கவலை எல்லாம் மறந்த வகுளமாலிகை, "கேசவா! இப்பொழுதாவது சொல்! வேட்டையாடப் போன இடத்தில் நடந்ததுதான் என்ன?" என்று திரும்பவும் கேட்டாள்.

"அம்மா! திரேதாயுதத்தில் நடந்த ஒரு விருத்தாந்தத்தை உங்களுக்குக் கூறுகிறேன்", ஸ்ரீநிவாசன் தொடர்ந்தார்.

அதற்கு ஸ்ரீராமர், "அக்னிதேவா! இந்த இராமாவதாரத்தில் நான் ஏகபத்தினி விரதனாக இருப்பதால் மற்றொரு மங்கையை மணப்பதில்லை. ஆகையால் கலியுகத்தில் வேதவதியை யாம் விவாகம் செய்து கொள்வோம்" என்று வாக்குருதி கொடுத்தார் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி.

இந்த வரலாற்றைச் சொன்ன ஸ்ரீநிவாசன் வகுளமாலிகையிடம், "அந்த வேதவதி தான் நாராயணபுரத்தை ஆண்டு வரும் ஆகாசராஜனின் மகள் பத்மாவதி. அவள் எனக்காகவே பிறந்தவள், எனக்காகவே வளர்பவள். இல்லாவிட்டால் வேட்டைக்குப் போன இடத்தில் அவளைச் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்படுமா?" என்றார் ஸ்ரீநிவாசன்.

"நீ பெண்களிடம் எப்படி எல்லாம் திருவிளையாடல் புரிகின்றாய்? ஸ்ரீநிவாசா! இதற்கெல்லாம் நீ கவலைப்பட வேண்டாம். நிம்மதியாக நித்திரை செய். பொழுது புலர்ந்ததும், நான் நாராயணபுரம் புறப்பட்டுச் சென்று ஆகாசராஜனைச் சந்தித்து, திருமணத்திற்கான சுபகாரியங்களை முடித்துவிட்டு வருகிறேன்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள் வகுளமாலிகை.

திருமால் திருமுகம் மலர்ந்தார். அமைதியாக பஞ்சணையில் திருக்கண் வளர்ந்தார். வகுளமாலிகை, திருமாலின் தேன் சிந்தும் திருவடிக்குத் திருப்பணி செய்தவாறு துயின்றாள்.

**தொடரும். . .**